
© NOWITZKITRAMONTO.DEVIANTART.COM
Sts. Perpetua and Felicity

# *புனித பெர்ப்பெத்துவா,*
# *புனித பெலிசித்தாள் (-203)*

பெர்ப்பெத்துவா உயர்ந்த குலத்தைச் சேர்ந்த ஒரு பெண். பெலிசித்தாள் அவளுடைய அடிமை. இருவரும் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்களானார்கள். இருவரையும் கைது செய்து காட்டு மிருகங்களுக்கு இரையாகப் போட தீர்ப்பிட்டார்கள். அவர்களோ பயப்படவில்லை. கிறிஸ்தவ வேதத்தை மறுதலிக்கவுமில்லை. வேதத்தை மறுதலிக்கும்படி அநேகர் பெர்ப்பெத்துவாவை அணுகிக் கெஞ்சிக் கேட்டார்கள். அவர்களின் முயற்சிகள் பயனளிக்கவில்லை. வயது முதிர்ந்த அவளுடைய தந்தை கண்ணீர் வடித்து மகளை மன்றாடினார். அவளது கையில் பால் குடிக்கும் குழந்தை இருந்தது. தாய் அன்பும் அவளை அசைக்கவில்லை. தனக்கு வரவிருந்த குரூர வேதனைகளை அறிந்தும் அவள் பின் வாங்கவில்லை.

பெலிசித்தாள் கருவுற்றிருந்தாள். எட்டு மாதக் குழந்தை வயிற்றில் இருந்தது. கர்ப்பிணிப் பெண்களைக் கொல்லக்கூடாது என்று ஒரு சட்டம் இருந்தது. வேத சாட்சி முடியை இழந்து போவேனோ என்றும் அஞ்சினாள். கிறிஸ்தவர்கள் அவளுக்காக உருக்கமாக கடவுளை மன்றாடி குழந்தை சீக்கிரம் பிறந்து விட்டது. எனவே இருவரும் தலைவெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

**சிந்தனை:**

“விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள். ஒருவர் ஒருவரை நேசியுங்கள். தாங்கள் படும் வேதனையைக் கண்டு மனம் தளர வேண்டாம்”. (புனித பெர்ப்பெத்துவா)

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் சாகும்வரை உமக்கு பிரமாணிக்கமாய் இருக்கும் வரம் தாரும்.